உ

# "ஜய ஜய வேலவ"

## ஸ்தோத்திரம்

—(o)—

உள்ளகரம்

ஸ்ரீவிஜய கணபதி ஆலய மண்டலாபிஷேக வைபவம்,
23—7—84 அன்று ஸ்ரீ விஜய குமாரஸ்வாமிக்கு
ஆடிக் கிருத்திகை உற்சவத்தின்போது
வெளியிடப்பட்டது.

அன்பளிப்பு : நா. கோபாலகிருஷ்ணன்,
49, கிருஷ்ண நகர்,
உள்ளகரம், சென்னை-91.

ஓம்
ஓம் சரவண பவாய நம:

# கடவுள் வாழ்த்து

ஊரிலான் குணம் குறியிலான் செயலிலான் உரைக்கும்
பேரிலான் ஒரு முன்னிலான் பின்னிலான் பிறிதோர்
சாரிலான் வரல் போக்கிலான் மேலிலான் தனக்கு
நேரிலான் உயிர் கடவுள் என்னுள்ளாய் நின்றான் —கந்தபுராணம்

நாளென் செயும், வினைதானென் செயும், எனை நாடி வந்த
கோளென் செயும், கொடுங் கூற்றென் செயும், குமரேசரிரு
தாளும், சிலம்பும், சதங்கையும், தண்டையுஞ் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்கு முன்னே வந்து தோன்றிடினே,
—கந்தர் அலங்காரம்

---

## சஜ்ஜன பாலக சண்முக ஸ்தோத்திரம்

இமகிரி தந்தவள் தந்தவிநாயக இளையவ, சரவண சண்முகனே
உமையொரு பாகனின் கண்ணினில் வந்தவ கண்ணனின் மருகனே
சண்முகனே
சமரர்கள் நற்றவப் பேற்றினில் வந்தவ தீயினில் வந்தவ சண்முகனே
ஜயஜய வேலவ தானவ நாசக சஜ்ஜனபாலக சண்முகனே. 1

கார்த்திகை மாதர்கள் கைபடவந்தவ கங்கையில்வந்தவ சண்முகனே
பேரார்திற வெம்பகை சூரர்கள் போக்கிட வந்தவ நாயக சண்முகனே
சாத்திர வேதமும் செஞ்சுடர் ஒளியென எழுந்திட வந்தவ சண்முகனே
ஜயஜய வேலவ தானவ நாசக சஜ்ஜனபாலக சண்முகனே. 2

வளமொடு செந்தமிழ் வளர்த்திட வந்தவ செஞ்சுடர்வானவ சண்முகனே
மலைமகள் அமுதுண மலையினில் தோன்றிய தென்றிசைநாயக
சண்முகனே
தீயொடு மதியுடை சங்கர தேவனின் மங்களபாலக சண்முகனே
ஜயஜய வேலவ தானவநாசக சஜ்ஜனபாலக சண்முகனே. 3

விடயிட வேலையும் விர்ரென சென்றிட கொடுமையழித்திடு சண்முகனே
முடியுடைச் சூரர்கள் அடியொழிந்திட வேலையெறிந்தவ சண்முகனே
தடமொடு குலகிரி தூள்பட உருவிய வேலுடைக் கழலுடைச் சண்முகனே
ஜயஜய் வேலவ தானவ் நாசக சஜ்ஜன பாலக சண்முகனே 4

முப்புர மெறியவே ஒரு கண முறுவல்செய் சங்கரநாயக சண்முகனே
அப்புர வீரமகேந் திர சூரனழிந்திடு மாற, குமாரனே சண்முகனே
சுப்பிர மணியென கற்றவர் போற்றிடும் நற்றமிழ் நாயக சண்முகனே
ஜயஜய வேலவ தானவ நாசக சஜ்ஜன பாலக சண்முகனே 5

# “மாயவன் மருகன்”

மாகடல் தோன்றிய கொடுவிஷமுண்டவன் தந்தமதலையே சண்முகனே
மாநிலந்தாங்கிய மாபெருவராக மாயவன் மருகனே சண்முகனே
மாயை விலக்கிட மாமயில் ஏறி நீ மகிழ்வுடன் வருவாய் சண்முகனே
ஜயஜய வேலவ தானவ நாசக சஜ்ஜன பாலக சண்முகனே 6
தூணைப் பிளந்திட தோன்றிய செங்கட் சீயவன் மருகனே சண்முகனே
மானைத் தொடர்ந்து மாரீசனை மாய்த்திடு மாயவன் மருகனே சண்முகனே
யானைத் துரத்திட வள்ளியணைத்திடு யானை அணங்கணைச் சண்முகனே
ஜயஜய வேலவ தானவ நாசக சஜ்ஜன பாலக சண்முகனே 7
சக்கர மெறியவே வக்கிரன் அழித்திடு விக்ரமன் மருகனே சண்முகனே
உக்கிர கௌரவர் ஒருபட மரித்திட வந்தவன் மருகனே சண்முகனே
சுக்கிரனறிவுரை நீக்கிடுமாபலி நீக்கியோன் மருகனே சண்முகனே
ஜயஜய வேலவ தானவ நாசக சஜ்ஜன பாலக சண்முகனே 8
மலைமகள் கலைமகள் அலைமகள் குறமகள் சுரமகள் போற்றிடு சண்முகனே
அலைவளர் கழற்கால் வேந்தன் துணித்திடு ராமனின் மருகனே சண்முகனே
சிலைவளைக் கோசலை தலைமகன் மைதிலி நாயகன் மருகனே சண்முகனே
ஜயஜய வேலவ தானவ நாசக சஜ்ஜன பாலக சண்முகனே 9
தில்லையில் ஆடிய நல்லவர் நல்லவன் வல்லபடைமகன் சண்முகனே
முல்லை நிகர்த்திடு வள்ளியணைத்திடு எல்லை இன்பொருளே சண்முகனே
வில்லையுடைத்தெறி தோள்வலி மாயவன் மருகனே, முருகனே சண்முகனே
ஜயஜய வேலவ தானவ நாசக சஜ்ஜன பாலக சண்முகனே 10

குஞ்சரி கொஞ்சிட இஞ்சிசூழ் தஞ்சையில் செஞ்சிவ குருவே சண்முகனே
மூஞ்சுறு வாகன குஞ்சர இளையவ மஞ்ஞையில் ஏறிய சண்முகனே
வஞ்சின கஞ்சனை துஞ்சிட வெஞ்சமர் புரிஹரி மருகனே சண்முகனே
ஜயஜய வேலவ தானவ நாசக சஜ்ஜன பாலக சண்முகனே 11

நரிபரி மாற்றிய கரியினில் உற்றவன் அரிபணி அரனுர் சண்முகனே
அரியுரு மாறிய மோகினி பெற்றவன் அரிஹர முதல்வனே சண்முகனே
துரிதுகில் வளர்ந்திட த்ரௌபதி போற்றிய துவரையன் மருகனே
சண்முகனே
ஜயஜய வேலவ தானவ நாசக சஜ்ஜன பாலக சண்முகனே 12

காலனைக் கால்பட வீழ்த்திடு சூலியின் கேள்வியில் ஓதிய சண்முகனே
காமனைக் கனலெழ விழித்திடு குழகனின் கண்படு மழுகவே சண்முகனே
சேடனைப்பாயென விழைந்து துயின்றவன் பழையவன் மருகனே சண்முகனே
ஜயஜய வேலவ தானவ நாசக சஜ்ஜன பாலக சண்முகனே 13

தலைகளுருளவே களரிசூரரை வெருள வெருட்டிடு சண்முகனே
களிறு பிளிற்றவே அருளுந்துளபமணி மாயவன் மருகனே சண்முகனே
முளரி முன்னவன் உளறி தளரவே உலகை வளர்த்தருள் சண்முகனே
ஜயஜய வேலவ தானவ நாசக சஜ்ஜன பாலக சண்முகனே 14

## புராதனி செல்வன்

நாரணி காரணி பூரணி யோக புராதனி செல்வனே சண்முகனே
நந்தினி தாரிணி தக்ஷிணி மர்த்தினி மோகினி செல்வனே சண்முகனே
பர்வத வர்த்தினி மலையசுஹாசினி வாஹினி செல்வனே சண்முகனே
ஜயஜய வேலவ தானவ நாசக சஜ்ஜன பாலக சண்முகனே 15

சும்ப நிசும்பனைச் சண்டனை முண்டனை கொன்றிடு காளியின் சண்முகனே
அம்புலி நாகமும் கங்கையணிந்திடு அம்பிகைப்பாகனின் சண்முகனே
சாம்பவி பாலக தாருக நாசக சிங்கவிநாசக சண்முகனே
ஜயஜய வேலவ தானவ நாசக சஜ்ஜன பாலக சண்முகனே 16

## சண்முக அநுபூதி (சண்முகனே

உள்ளிலும் வெளியிலும் ஒளியிலும் இருளிலும் அருளை வளர்த்தருள்
அள்ளி அலை கொளும் குள்ளமுனிப்புகழ் தெள்ளு தமிழ்ப்புகழ்
சண்முகனே
வெள்ளை களிற்றினில் துள்ளிடுவாசவன்தொல்லையைத்தீர்த்தருள்
சண்முகனே
ஜயஜய வேலவ தானவ நாசக சஜ்ஜன பாலக சண்முகனே 17

சாரதை சங்கர அத்வைத மனோஹர சங்கர அரஹர சண்முகனே
ச்யாமள ரங்க ராமானுஜ, மத்துவ தத்துவம் நீயே சண்முகனே
பாரத புத்தனின் தத்வ மறுத்திடு அப்பரின் மணியே சண்முகனே
ஜயஜய வேலவ தானவ நாசக சஜஜனபாலக சண்முகனே 18

மந்திர தந்திர யந்திரஜாலங்கொள் சர்வதந்திர சண்முகனே
சுந்தரர் முதலா நந்தவமணிகள் போற்றிஇசைத்திடு சண்முகனே
சாது அருணகிரி நொந்திடு போதினில் வந்திடு கந்தனே சண்முகனே
ஜயஜய வேலவ தானவ நாசக சஜ்ஜன பாலக சண்முகனே 19

எண்ணிட முடியா மின்னிடுவிண்மீன் உந்திருமேனியா சண்முகனே
நுண்ணியஅணுவினுள் நுண்ணிய பொருளினுள் உள்ளவன் நீயோ சண்முகனே
கண்டு கொண்டவர் விண்டிட முடியா பண்டு நின்றவா சண்முகனே
ஜயஜய வேலவ தானவ நாசக சஜ்ஜன பாலக சண்முகனே 20

## சர்வ வியாபியான சண்முகன்

ஒருகண நினைவினில் ஊன்றிய வித்தினில் உலகெனப் படைத்தனே சண்முகனே
கருவென நினைமதில் விண்ணில் வளர்ந்திடஏனெனப்படைத்தனே சண்முகனே
ஒருகுரலெழுதுபவன் பிறந்து விழித்திட ஒருவினை செய்தனே சண்முகனே
ஜயஜய வேலவ தானவ நாசக சஜ்ஜன பாலக சண்முகனே 21

பிள்ளையாந்திட அன்பியணைத்திடு அன்னையும் நீயே சண்முகனே
மெல்ல நடத்திடு செவ்வனே என்றிடு தாதையும் நீயே சண்முகனே
சொல்லியழுத்திடு சுற்றமும் உற்றமும் சர்வமும் நீயே சண்முகனே
ஜயஜய வேலவ தானவ நாசக சஜ்ஜன பாலக சண்முகனே 22

படிபடியென்றென்னை கடிந்திடுங் குருவும் கல்வியும் நீயே சண்முகனே

கொடியிடை அசைத்திடு கடிமணப் பெண்ணெனும்மாயையும் நீயே
சண்முகனே
அடியனை அன்பினால் ஆசையில் ஆட்டிடு கன்றுகள் நீயே சண்முகனே
ஜயஜய வேலவ தானவ நாசக சஜ்ஜன பாலக சண்முகனே 23

நரைதிரை வந்து நடுங்கி ஒடுங்கிடும் போதுனை நினைந்தேன் சண்முகனே
மறை உரை பொருளே செந்தனே கந்தனே காத்தருள்புரிவாய்
சண்முகனே
கரையிலா சாகர வாழ்வது நீங்கிட கைகொடு வேலவ சண்முகனே
ஜயஜய வேலவ தானவ நாசக சஜ்ஜன பாலக சண்முகனே 24

கரிய எருமையின் கண்படுதென்னவன் கண்படா முன்னம்வா சண்முகனே
உரியபொருளிவன் என்றெனைக்கருதி நீஉன்னருள் தருவாய் சண்முகனே
துரியந்துரிய அதீத நிலையருள் பரம் பொருள் நீயே சண்முகனே
ஜயஜய வேலவ தானவ நாசக சஜ்ஜன பாலக சண்முகனே 25

## பிரார்த்தனை

நோய்களின் வேதனை நொடியில் ஒழிந்திட மெய்யடிபோற்றினேன்
[சண்முகனே
பேய்களும் பூத பிசாசுகள் ஓடிட விடுவிடு வேலை சண்முகனே
பாயினில் கண்களில் உறங்கிடும் போதுநீ சேயெனக்காத்தருள் சண்முகனே
ஜயஜய வேலவ தானவ நாசக சஜ்ஜன பாலக சண்முகனே 26

எண்ணங்கள் நல்லவை எண்ணியபடிவர உன்னருள் தருவாய் சண்முகனே
முன்னம் செய்திவினை கோள்களின் கொடுவினை நீங்கிடுவரந்தா
சண்முகனே
கண்களில் நல்லவை கண்டிட, கேட்டிட திருவருள்செய்திடு சண்முகனே
ஜயஜய வேலவ தானவ நாசக சஜ்ஜன பாலக சண்முகனே 27

சுற்றம் பகைக்கினும் உற்றம் பகைக்கினும் உற்றவன் நீயே சண்முகனே
சுற்றவர் செய்அபி சாரக மந்திரம் சுற்றிவராமல் செய் சண்முகனே
சடுகண் பார்வையும் கேடுறு செயல்களும் விடுவராமல் செய் சண்முகனே
ஜயஜய வேலவ தானவ நாசக சஜ்ஜன பாலக சண்முகனே 28

உன்னையே போற்றிட உலகில் விரும்பிய வண்ணமே செய்திடு சண்முகனே
உலகுவாழ் தெய்வ வணக்கமும்பூஜையும் உன்னையேபோற்றுதுசண்முகனே
என்னை வளர்த்திடு எண்ணம் வளர்த்திடு உன்னருள்தந்திடு சண்முகனே
ஜயஜய வேலவ தானவ நாசக சஜ்ஜன பாலக சண்முகனே 29

வேலைப்பணிந்திட வாழ்வு அளித்திடு காலையின் செந்நிற சண்முகனே
கால்களைப் பற்றிட கண்ணில் இருத்திட கையில் அணைத்திடு சண்முகனே
மயிலைப்புகழ்ந்திட மனத்திருத்திட மெய்பதந்தருவாய் சண்முகனே
ஜயஜய வேலவ தானவ நாசக சஜ்ஜனபாலக சண்முகனே

முருகா சரணம்
முருகா சரணம்
முருகா சரணம்
ஓம் ''தத்சத்''